ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
National Institute of Language Education and Training

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# ANNUAL **REPORT**



# 2023

# NILET

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற ்சி நிறுவனம் (NILET) 2007 இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் நிர்வாக செயற்பாடுகளுக்காக பணிப்பாளர் நாயகத்துக்கு நிறுவன ஆளணியினர் உதவுவார்கள்.

NILET இன் தலைமை அலுவலகம் : 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புற, பன்னிப்பிட்டிய எனும் முகவரியில் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்துக்கு அமைய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குதல் முதன்மைப் பொறுப்பாகும். நிறுவனத்துக்கு உரிய தந்திரோபாயம் ஊடாக அந்த கருமங்கள் மேலும் மேம்படுத்தப்படுகிறது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அரச அலுவலர்கள், மொழி பயிலுனர்கள் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு பயிற்சிகள், பொது மக்களுக்காக விஷேடமாக திட்டமிடப்பட்ட மொழிப் பயிற ்சி கல்வி பாடநெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# உள்ளடககம்


| | |
|---|---|
| அறிமுகம் | 01 |
| குறிகோள் அடைவதற்காக | 02 |
| முகாமைத்துவ சபை | 03 |
| கல்விச் சபை | 04 |
| நிறுவனக் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் | 05 |
| நிறுவன செயற்பாடுகள் | 09 |
| நிதிச் செயலாற்றுகை | 11 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 17 |
| முகங்கொடுக்கும் சவால்கள் | 27 |

தீவேகமாக மாற்றமடையும் உலகில் முதன்மையான தொடர்பாடல் கருவியாகவும், அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் புத்தாக்கங்களை மேற்கொள்ளும் ஊடகம் என்ற ரீதியில் மொழி சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

ஒன்றுக்கு அதிகமான மொழிகளை கற்பதனால் வினைத்திறனான தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும் என்பதுடன், அது நேரடியாக சமகால உலகில் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற ்ற பங்களிப்பு செய்கிறது.

பெரும்பாலான நிறுவனங்கள் ஏற்கனவே உலகமயமாகியுள்ளன என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். குறித்த நிறுவனங்களில் பல்மொழி அறிவுள்ள நபர்களுக்கு பெரும் கிராக்கி உள்ளது. அவ்வாறான கிராக்கி காரணமாக எமது நிறுவனம் முன்னோக்கி பயணிக்கிறது என்பதனை புரிந்துகொள்ள வேண்டும்.

நவீன கல்வி வசதிகள் ஊடாக பல மொழிகளை கற்பதற்கான வாய்ப்பை பெற விரும்புவோருக்கு சாதகமான சூழமைவை உரவாக்குதல் எமது முதன்மைக் குறிக்கோள் ஆகும். பயிலுனர்களின் திருப்தி, பொறுப்பு, நிபுணத்துவம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பாவிப்பதற்கான அக்கறை எமது முழுமையான வெற்றிக்கான ஏதுவாக மாறியுள்ளது.

நாம் எமது கற்பித்தல் முறைமையின் தரத்தை உயர்வாக பேணி எந்தவொரு சந்தர்ப்பத ்திலும், பயிலுனர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு திறமையான தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஆளணியினரை ஈடுபடுத்துகிறோம்.

எந்தவொரு நிறுவனமும் சரியான நிதி அறிக்கையை பேணுதல், அந்த நிறுவனத்தின் வெற்றிக்கு உந்துசக்தியாகவும் என நம்புகிறோம். எனவே நாம் எப்போதும் சரியான நிதி அடையுகளை உறுதி செய்வதுடன், தொலைநோக்குடன் நிதி திட்டமிடலுக்கு இணையாக முழுமையான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

எமது நிறுவனம் வெற்றிகரமாக வருமானத்தை ஈட்டி முன்னோக்கி பயணித்தல் தொடர்பான அறிக்கையை வெளியிட வாய்ப்பு கிடைத்தமை தொடர்பாக பெருமையடைகிறோம். அத்துடன், அதன் பெறுபேறாக 2023 ஆண்டின் இறுதியளவில் சுயமாக நிதியீட்டும் நிறுவமாக மாறுவதற்கான தந்திரோபாயத்தை திட்டமிடுகிறோம்.

நிறுவனத்துக்கு பொருத்தமான தகுந்த வரவுசெலவுத் திட்ட முறைமையை பின்பற்றுவதன் மூலம் எந்தவொரு நபரும் தமது நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்பான எதிர்வுகூறலை வழங்குவதற்கான புரிதலைப் பெறுவதற்கு வழிவகுக்கிறது.

அதற்கமைய, நிறுவனத்தின் அலுவலர்களான நாம் ஒன்றிணைந்து 2023 ஆண்டுக்கான சுயமாக நிதியீட்டும் நிறுவனமாக முன்னோக்கி பயணிப்போம்.

வருடாந்த அறிக்கை 2023

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

# குறிகோள்
# அடைவதற்காக

ிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் தொடர்பாக அறிவவைப் பெற
விரும்பும் எவருக்கும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை
கற்பிக்கும் திறமையான ஆசிரியர்களை உருவாக்குதல்.

எழுத்துமூலமான சட்டத்ததின் மூலம் நிறுவப்பட்ட தேசிய மொழிபெயர்ப்பு
சேவை மற்றும் தேசிய உரைபெயர்ப்பு சேவையில் நியமிக்க வேண்டிய
சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறைமையுள்ள
மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களை உருவாக்குதல்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர்கள்,
மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களை பயிற்றுவிப்பதற்காக
தகைமையுள்ள ஆசிரியர்களை உருவாக்குதல்.

மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக மும்மொழி
ஆற்றலுள்ள நபர்களைப் பயிற்றுவித்தல்



# முகாமைத்துவ சபை

**திரு. ஜயம்பதி பண்டார ஹீன்ஹெந்த** - உறுப்பினர்
தலைவர் - (2023.10.27 வரை)

---

**திரு. அனுராத வீரக்கோன்** - உறுப்பினர்
மேலதிக செயலாளர் - (2023.10.27 வரை)
அரச சேவைகள் மறுசீரமைப்பு, தேசிய மொழிகள், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

---

**திருமதி. கே.டி.ஐ.எஸ்.கே.சிறிவர்த்தன** - உறுப்பினர்
பிரதி பணிப்பாளர் - (2023.10.27 வரை)
திறைசேரி செயற்பாட்டத் திணைக்களம்
நிதி அமைச்சு

---

**திரு. தினுத் ஹெட்டியாராச்சி** - உறுப்பினர்
பட்டயக் கணக்காளர் - (2023.10.27 வரை)

---

**கலாநிதி டபிள்யூ.கே. கொலம்பகே** - உறுப்பினர்
தலைவர் - செல்போட் கூட்டு நிறுவனம்
(2023.10.27 வரை)

---

**திரு. விதுர்ஷன் வின்சன் ராஜா** - உறுப்பினர்

---

**ஜனாப்ʼ. என்.ஜீஎஸ்.எச். நுஷாட்** - உறுப்பினர்

---

**கலாநிதி பிரசாத் ஆர். ஹேரத்**
பணிப்பாளர் நாயகம் - சபையின் செயலாளர்
(2023 ஜனவரி தொடக்கம் மே வரை)

மேற்குறித்த முகாமைதʼதுவ சபை 2023.10.27 வரை இயங்கியது.

**திரு. வினோத்குமார் முணசிங்க** - உறுப்பினர்
தலைவர் - (2023.11.14 தொடக்கம்)

---

**திரு எம் எல். கம்மன்பில** - உறுப்பினர்
மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம்)
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

---

**திருமதி. ஆர்.பி.எஸ். சமன்குமாரி** - உறுப்பினர்
மேலதிக செயலாளர், தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு நீதி அமைச்சு

---

**திருமதி. சீ.எம்.பி.ஜே.திலகரத்ன** - உறுப்பினர்
பணிப்பாளர் - கல்வி அமைச்சு

---

**திரு. முருகன் சச்சிதாநந்தன்** - உறுப்பினர்

---

**திருமதி ஹசானா சிகு** - உறுப்பினர்

---

**திரு. ஜயந்த ஜயமான்ன** - உறுப்பினர்

---

**திரு. சீலரத்ன செனரத்** - உறுப்பினர்

---

**திரு. ஷமிந்த மஹலேக்கம்**
பணிப்பாளர் நாயகம் (பதில்) - சபையின் செயலாளர் (2023.11.06 தொடக்கம்)

# கல்விச் சபை



**திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த**
தலைவர் (2023.10.27 வரை)

---

**கலாநிதி சதஹோம் கோபரஹேவா**
பிரிவு தலைவர் - சிங்கள மொழி கல்விப் பிரிவு கொழும்பு பல்கலைக்கழகம்

---

**கலாநிதி. குசும்லதா லங்காமுல்ல**
பிரிவுத் தலைவர் - சிங்கள மொழி மற்றும் பொதுசனத் தொடர்பு பிரிவு,
மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

---

**கலநிதி. கே.ஓ.டி.எஸ். கருணாநாயக்க**
பிரிவு தலைவர் - ஆங்கில மொழிப் பிரிவு - கலைப்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

---

**கலாநிதி எம்.ஏ.எஸ்.சாதிக்கா**
பிரிவு தலைவர் - மொழிப் பிரிவு
கலை மற்றும் கலாச்சார பீடம்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

---

**கலாநிதி எஸ்.பிரசாந்தன்**
பிரிவுத் தலைவர் - தமிழ் கல்விப் பிரிவு
பேராதனைப் பல்கலைக்கழகம்

---

**கலாநிதி பி.என்.ரத்நாயக்க**
பிரிவுத் தலைவர் - ஆங்கிலம் மற்றும் மொழியியல் பிரிவு
மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடம்
ருகுணு பல்கலைக்கழகம்

---

**திரு. பி.சேனாதீர**
ஆணையாளர் நாயகம்
அரசகரும மொழிகள் திணைக்களம்

---

**கலாநிதி பிரசாத் ஆர். ஹேரத்**
பணிப்பாளர் நாயகம் - சபையின் செயலாளர

# நிறுவனக் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மும்மொழி கொள்கையை அமுல்படுத்துவதற்காக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் 2007/26 இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் சட்டரீதியான நிறுவனமாக நிறுவப்பட்டது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதான அலுவலகம் 321/1/1 ஹைலெவல் வீதி, மாகும்புர, பன்னிப்பிட்டிய எனும் இடத்தில் அயங்குகிறது. மொழிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்தல், செயற்படுத துதல் மற்றும் அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களுடன் வினைத்திறனான தொடர்புகளை உருவாக்குவதன் மூலம் அந்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு பாடநெறிகளுக்கான வசதிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பிரதான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வினைத்திறனான அரச சேவைக்காக அரச அலுவலர்களின் இரண்டாம் மொழி திறன் தேவையை பூர்த்தி செய்வதற்காக 18/2022 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய இரண்டாம் மொழி பயிற்சி ாடநெறிகளுக்குரிய அனைத்து சயற்பாடுகளும் எமது நிறுவனத்தினால் மற்கொள்ளப்படுகிறது.

## அகலவத ்தை பயிற்சி நிலையம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நிலையம் களுத்துறை மாவட்டத்தில் கொழும்பிலிலுந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கலேவத்த, அகலவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ளது. தேசிய பெருந்தோட்ட மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்குரிய 2.5 ஏக்கர் காணி அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. குறித்த காணி அமைந்துள்ள சூழமைவு நிறுவனத்தின் அபிவிருத்திக்கு மிகவும் சாதகமான காரணயாக உள்ளது. மொழிக் கற்பித்தல் செயன்முறையை மிகவும் அழகியல் பாங்குடன், பிரயோக மற்றும் அறிவுசார் முறையில் மேற்கொள்ளக்கூடிய வனப்பான சூழல் மற்றும் மனங்கவர் தோற்றத்துடனான வதிவிட வசதிகளுடன் அகலவத்த மொழி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## தம்புல்ல பயிற்சி நிலையம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைக்கு அமைய இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்), இணைப்பு மொழியான ஆங்கிலம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்காக பிரதேச ரீதியில் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன், இல : 734/1,

அனுராதபுர வீதி, தம்புல்ல எனும் இடத்தில் நிறுவப்பட்ட பயிற்சி நிலையம் 2022.04.24 திகதி அரச சேவைகள், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் அவர்களது தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது குறித்த பயிற்சி நிலையம் இரண்டாம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தளை மாவட்ட அலுவலகம், நிர்வாக கட்டித் தொகுதி, கம்உதாவ, தம்புல்ல எனும் முகவரியில் அமைந்துள்ளது. இந்த நிலையத்தில் அலுவலகம் மற்றும் விரிவுரை மண்டபத்தை கொண்டுள்ளது. தற்போது குறித்த நிலைய (திட்டமிடல்) உதவி பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் ஒரு கல்வி மற்றும் ஆராய்ச்சி அலுவலர், நான்கு முகாமைத்துவ சேவை அலுவலர்கள், இரண்டு அலுவலக பணியாளர்கள் மற்றும் ஒரு சாரதியும் பணியாற்றுகிறார்கள்.

மாத்தளை, கண்டி, குருணாகல், அனுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய மாவடங்களை இலக்காக கொண்டு அமைக்கப்பட்டுள்ள நிலையத்தினால் மேற்குறித்த மாவட்டங்கள் அடங்கலாக நாடு முழுவதுமுள்ள அரச அலுவலர்கள் மற்றும் சிவில் சமூகத்துக்காக வினைத்திறன் மற்றும் முறையான மொழிப் பயிற்சி பாடநெறியை நடத்தவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

## முகாமைத்துவ சபை

நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு தேவையான அனைத்து தீர்மானங்களும் கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபையால் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2007/26 இலக்க சட்டத்தின் 3 (1) பிரிவுக்கு அமைய கௌரவ அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது. 2023 ஆண்டில் மொத்தமாக பத்து (10) முகாமைத்துவ சபை கூட்டங்கள் நடைபெற்றுள்ளது.

## தேசிய மொழிக் கல்வி மற ்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விச் சபை

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2007/26 இலக்க சட்டத்தின் 7 ஆவது பிரிவுக்கு அமைய நிறுவனத்தின் கல்விச் கருமங்களுக்கு உதவுவதல் மற்றும் துறைசார்ந்த ஏனைய செயற்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக கௌரவ அமைச்சரால் பின்வரும் கல்விச் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1978/16 இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் மொழி மற்றும் கல்வி துறையை பிரதிநிதித்துவம் செய்யும், பல்கலைக்கழக கற்பித்தல் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களை உள்ளடக்கிய கல்விச் சபை நிறுவனத்தின் மொழிரீதியான கொள்கைகளை தீர்மானிப்பதில் நேரடியாக கடப்பாடு கொண்டுள்ளது.

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய கல்விச் சபை நிறுவனத்தின் கல்வி செயற்பாடுகள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்பதுடன், கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்தவச் சபைக்கு விதந்துரை வழங்க வேண்டும்.

## நிறுவனத்தின் ஆளணி

பணிப்பாளர் நாயகம் நிறுவன ஆளணியின் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார். முகாமைத்தவ சபையின் ஏற்பாடுகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம் பின்வரும் கடமைகளை நிறைவேற்றுகிறார். நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு, நிறுவனத்தின் அனைத்து ஆளணியினரையும் நியமித்தல், நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து பயிற்சிகளையும் ஒருங்கிணைப்பு செய்தல், நிர்வாகம் மற்றும் நிறுவன செயற்பாடுகளின் மேற்பார்வை போன்ற கடமைகளை பணிப்பாளர் நாயகம் மேற்கொள்கிறார்.

## நிர்வாக மற்றும் வழங்கல் பிரிவு

இந்த பிரிவினால் நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து நிர்வாக மற்றும் நிறுவன செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், நிறுவனத்தின் ஏனைய பிரிவு கருமங்களை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி பிரிவுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதுடன், பல்வேறு பிரிவுகளின் கருமங்களை வினைத்திறனாகவும், உற்பத்தித்திறனாகவும் அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஊழியர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பயிற்சிகளுக்கு தேவையான பயிற்சி கருவிகள் மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான கணனிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள் இந்த பிரிவனால் கொள்வனவு செய்யப்படுகின்றன. வாகனங்களின் பராமரிப்பு, போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு சேவை மற்றும் தூய்மையாக்கல் சேவைகளும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவையும் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

## திட்டமிடல் பிரிவு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கு குறிக்கோள் மற்றும் இலட்சியங்களை அடைவதற்குத் தேவையான திட்டமிடல்களை மேற்கொள்ளுதல் இந்த பிரிவின் முதன்மைப் பொறுப்பாகும்.

பயிற்சித் தேவைகளை அடையாளம் காணுதல், ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்தல், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மாதாந்த திட்டங்களைத் தயாரித்தல், கணக்கு பிரிவுடன் இணைந்து மாதாந்த பணத் தேவையை பெற நடவடிக்கை எடுத்தல், மாதாந்தம், காலாண்டு மற்றும் வரடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை போன்றவற்றை தயாரித்து உரிய பிரிவுகளுக்கு அனுப்பும் செயற்பாடுகள் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இந்த பிரிவின் மூலம் பல்வேறு கருத்திட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய திட்டமிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றின் முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு சுயாதீனமாக செயற்படுகிறது. குறிக்கோள் தொடர்பான ஆலோசனை செயற்பாடுகள் ஊடாக நிறுவனத்தின் இயக்கத்துக்கு பெறுமதி சேர்க்கிறது. நிறுவனத்தின் தரவுப் பகுப்பாய்வு மற்றும் செயன்முறையின் அடிப்படையிலான அவதானிப்பு மற்றும் விதந்துரைகளை வழங்கி நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைக்கு உதவும் இடர் முகாமைத்துவம், நிர்வாகம், மேம்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறன் ஊடாக தமது குறிக்கோளை அடைவதற்காக நிறுவனத்தில் முறையான மற்றும் ஒழுக்மான முறைமை பாவிக்கப்படுகிறது.

உள்ளக கணக்காய்வு அலகு என்பது நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்ப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன குறிக்கோள் மற்றும் ஆலோசனை செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரிவாகும்.

தேசிய மொழிக் கல்வி மற்றும் நிறுவனத்தின் வளங்களை உயர்ந்தளவு பயன்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றுவதற்கு நிர்வாகத்துக்கு உதவுதல் உள்ளக கணக்காய்வு பிரிவின் பணிப் பொறுப்பாகும்.

## பயிற ்சிப் பிரிவு

பயிற்சிப் பிரிவு பிரதானமாக அரச அலுவலர்களுக்காக மூன்று வகுதிகளில் இரண்டாம் மொழி பயிற்சிப் பாடநெறி ஏற்பாடு

செய்கிறது. அதன் கீழ் பின்வரும் பயிற்சிநெறிகள் நடத்தப்படுகின்றன.

1. பதவிநிலை அலுவலர்களுக்கான 200 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) பயிற்சி பாடநெறியை நடத்துதல்.
2. இரண்டாம் நிலை வகுதி அரச அலுவலர்களுக்கான 150 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) பயிற்சி பாடநெறியை நடத்துதல்.
3. ஆரம்ப வகுதி அலுவலர்களுக்கான 100 மணித ் தியால இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) பயிற்சி பாடநெறியை நடத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பயிற்சி நெறிகளையும் ஏற ் பாடு செய்தல் மற்றும் தொடர்சியாக பாடநெறிகளை நடத்துவதற்கான முறைமைகளையும் பாவித்து பயிற்சி பாடநெறிகள் தொடர்பான முறையான மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தலை மேற்கொள்வதும் பயிற்சிப் பிரிவின் பணிப்பொறுப்புக்கு உரியதாகும். அத்துடன் வளவாளர் குழாம் இற்றைப்படுத்தி, பேணப்பட்டு குறித்த வளவாளர்களை பயிற்சிப் பாடநெறிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தலும் பயிற்சிப் பிரிவின் முக்கியமான பணிகளாகும்.

அத்துடன் நிறுவனத்தின் நோக்கத்தை மிகவும் வினைத்திறனாக அடைவதற்காக பின்வரும் கருமங்களும் பயிற்சிப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளன.

1. அரச அலுவலர்களுக்கான இடைக்கால பாடநெறிகளை நடத்துதல்.
2. ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகளை நடத்துதல்.
3. தொடராய்வு மற்றும் முறைமைப்படுத்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
4. அனைத்து முழுநேர பாடநெறிகள் தொடர்பில் முறையான மதிப்பீடுகளை நடத்துதல்.

அதற்கு மேலதிகமாக நிறுவனத்தினால் நடத்தப்படும் வருமானம் ஈட்டல் பாடநெறிகளும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் கீழ்,

1. இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் தமிழ் டிப்பிளோமா பாடநெறி
2. இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறி
3. மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி
4. விஷேட

தொழில்வாண்மையாளர்களுக்கான இரண்டாம் மொழிப் பாடநெறி

5. ஆங்கில மொழி பாடநெறி
6. வெளிநாட்டு மொழி பாடநெறி (இந்தி, ஜப்பான், கொரியன், பிரெஞ்சு, ருஷிய மொழி)
7. சைகை மொழி பாடநெறி
8. பிரைல் மொழி பாடநெறி

மேற்குறித்த பாடநெறிகள் தொடர்பாக அனைத்து செயற்பாடுகளும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. சமகால தேவைகளுக்கு பொருத்தமான வகையில் பயிற்சிப் பாடநெறிகளை இற்றைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதிலும் பயிற்சிப் பிரிவு தொடர்ச்சியாக கவனம் செலுத்துகிறது.

அதற்கமைய, இலங்கை சமூகத்தில் பல்வேறு மொழிகளை பாவிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதலை நோக்கமாக கொண்டு மொழிப் பன்மைத்துவம் உள்ள இனங்கள் மத்தியில் சமாதானம் மற்றும் சகவாழ்வு விருத்தி செய்யப்படும் வகையில் சம்பிரதாயமான இரண்டாம் மொழிப் பாடநெறி போக்கிலிருந்து விலகிய இதயங்களுக்கிடையிலான பிணைப்பு, அழகியல் அணுகுமுறைகள் ஊடாக பிரயோக மொழிப் பாவனை மற்றும் நல்லிணக்க மனப்பாங்கை மேம்படுத்தும் மனப்பாங்கை மேம்படுத்தும் தரமுயர்ந்த பாடநெறிகளை வழங்கும் செயற்பாட்டில் பயிற்சிப் பிரிவு ஈடுபடுகிறது.

# நிறுவன செயற்பாடுகள்

**அரச நிர்வாச்சுற்றறிக்கைஎண் 18/2020 மறறும் பொதுநிர்வாகச்சுற்றறிக்கைஎண் 01/2023 இற்கமைய நடத்தப்பட்ட** பாடநெறிகள்

| தொ. இல | பாடநெறி | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | பாடநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | வருமானம் (ருபா) |
| 1. | திறைச்சேரி நிதியினுடக நடத்தப்பட்ட பாடநெறிகள் பயிற்சிகள் தொடர்பான விபரங்கள் | | | |
| | i. 100 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 2 | 167 | - |
| | ii. 150 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 18 | 2,141 | - |
| | மொத்தம் | 20 | 2,308 | - |
| 2. | அரச நிறுவன சொந்த செலவில் நடத்தப்பட்ட பாடநெறிகள் | | | |
| | i. 100 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 1 | 26 | - |
| | ii. 150 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 15 | 813 | - |
| | iii. 200 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 4 | 198 | - |
| | மொத்தம் | 20 | 1,037 | - |
| 3. | கட்டணம் அறவிட்டு நடத்தப்பட்ட பாநெறிகள | | | |
| | i. 100 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 23 | 1,140 | 5,867,620 |
| | ii. 150 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 261 | 11,995 | 117,557,000 |
| | iii. 200 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 44 | 2,003 | 10,058,000 |
| | மொத்தம் | 328 | 15,138 | 133,482,620 |
| 4. | பொறுப்பு வழங்கப்பட்ட நிறுவனங்களால் நடத்தப்பட்ட பாடநெறிகள் | | | |
| | i. 100 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 28 | 289 | 216,750 |
| | ii. 150 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 171 | 15,077 | 22,615,500 |
| | iii. 200 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 38 | 756 | 1,701,000 |
| | மொத்தம் | 237 | 16,122 | 24,533,250 |
| | முழுத்தொகை | | | |
| | i. 100 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 54 | 1,622 | 6,084,370 |
| | ii. 150 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 465 | 30,026 | 140,172,500 |
| | iii. 200 மணித்தியால சிங்களம்/ தமிழ் மொழி பாடநெறி | 86 | 2,957 | 11,759,000 |

## நிறுவனங்களால் நடத்தப்பட்ட வேறுபாடநெறிகள்

| தொ. இல | பாடநெறி | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | பாடநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
| | டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் | | | |
| 1. | பிரெஞ்சு மொழி சான்றிதழ் பாடநெறி | 1 | 4 | 120,000 |
| 2. | சிங்கள மொழி டிப்ளோமா பாடநெறி | 3 | 89 | 856,000 |
| | விசேடகுழுக்களுக்கு நடத்தப்பட்ட பாடநெறிகள் | | | |
| 3. | பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுள்ளான ஆங்கில மொழிப்பாடநெறி (40மணி, 100மணி, 150மணி, 200மணி) | 8 | 69 | 110,000 |
| 4. | வங்கி ஊழியர்களுக்கான 20 மணிநேர ஆங்கில மொழிப்படநெறி | 1 | 10 | 60,000 |
| 5. | பத்திரிகையாளர்களுக்கான 150 மணிநேர சிங்கல/ தமிழ் மொழிப்பாடநெறி | 2 | 44 | 150,000 |
| 6. | இளைஞர்களுக்கான 100 மணிநேர சிங்கள மொழிப்பாடநெறி | 1 | 45 | 45,000 |
| | மொத்தம் | 16 | 261 | 1,341,000 |

## ஆசிரிய பயிற்சி பாடநெறிகள்

| தொ. இல | பாடநெறி | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | பாடநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
| 1. | 50 மணிநேர அடிப்படை ஆசிரியர்பயிற்சி நெறிகள் | 3 | 126 | 2,240,000 |
| 2. | வளவாளர்களுக்கான கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் அமர்வுகள் | 3 | 241 | - |
| | மொத்தம் | 6 | 367 | 2,420,000 |

# நிதிச் செயலாற்றுகை

## குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கோட்பாடுகள்

### 1.1 நிதிக்கூற்று தயார் செய்தலின˙ அடிப்படை:

நிறுவனத்தின் நிதி சார் அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தர நிலைகளின் அடிப்படையிலையே உருவாக்கப்பட்டுள்ளன. வெற்றிக்கான குறிப்புக்களில் பொருத்தமானதும் திட்டவட்டதுமான கொள்கைகளின் பயன்பாடு பற்றி விளக்கப்பட்டிருக்கும் அதேவேளை நிதி அறிக்கைகளைப் பாதிக்கும் பணவீக்கக˙ காரணிகள் தொடர்பில் எந்தவித சரிசெய்தலும் இதில் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.2 ஓப்பீட்டுத் தகவல்

நிகழ்கால நிதி அறிக்கைகள் தொடர்பான புரிதலை அதிகரிப்பதற்காக கடந்த காலம் தழுவிய அவசியமான ஒப்பீட்டு மாதிரிகள் வெளியிடப்படுகின்றன.

நிதி அறிக்கைகளில் உள்ள ருப்படிகளின் விளக்கக் காட்சி மற்றும் மறுவகைப்படுத்தல் போன்றவை திருத்தியமைக்கப்படும் போது சிறந்த விளக்கக் காட்சியொன்றை வழங்குவதற்காக ஒப்பீட்டுத் தொகைகளும் நடப்பு ஆண்டை ஒத்த விதமாக மறுவகைப் படுத்தப்படுகின்றன.

### 1.3 உடமைகள், தாவரங்கள் மற்றும் உபகரணங்கள்

உடமைகள், தாவரங்கள் மற்றும் உபகரணங்களின் விலைகள் பெறுமானத் தேய்வை அப்புறப்படுத்திய பின்னரே குறிக்கப்படுகின்றன. அனைத்து சாத்துக்கள், தாவரங்கள், உபகரணங்களினதும் தேய்மானத்துக்கான ஒதுக்கீட்டைக் கணிப்பதன் மூலம் பெறுமதி கணிக்கப்படுகின்றது. நிலம் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள், உபகரணங்கள் போன்றவற்றை அவற்றின் ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமதி மதிப்பீடு ஒன்றை கீழே காட்டப்பட்டுள்ளவாறு தவணை முறை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

#### 1.3.1 பெறுமானத் தேய்வு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு கணக்கீடு கொள்வனவு திகதி / அகற்றல் திகதி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

| விவரணம் | விலை வீதம் |
|---|---|
| கட்டடம் மற்றும' அமைப்பறை | 2.5 |
| தளபாட மற்றும் அலுவலக உபகரணம் | 10 |
| நூலக நூல்கள் | 10 |
| தாவரம், இயந'திரம் மற்றும் உபகரணங்கள் | 20 |
| வாகனங்கள் | 25 |
| கணனிகள் | 25 |
| இணையத்தளம் மற்றும் மென்பொருள் | 25 |

### 1.4 உபகாரத் தொகை ஒதுக்கீடு

இத் தொகையானது, பொருளாதர ஆண்டின் இறுதி மாத சம்பளத்தின் அரைவாசி தொகைக்கு சமமாக வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியான ஒரு வருட சேவையின் முடிவில் ஒவ்வொரு அலுவலருக்கும் இது வழங்கப்படுவதுடன் சேவையின் முதல் வருடத்தில் இருந்தே இது ஆரம்பிக்கப்படும்.

எவ்வாறெனினும், 1983ம் ஆண்டின் 12ம் இலக்க உபகாரத் தொகை கொடுப்பனவு சட்டத்தின் படி, ஒரு அலுவலர் 5 வருட தொடர்ச்சியான சேவையின் பின்னரே இக்கொடுப்பனவுக்குத் தகுதி பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது.

### 1.5 வர்த்தக வரவுகள்

வர்த்தக வரவுகளானது, எதிர்பார்க்கப்படும் உணரக்கூடிய பெறுமதிகளைச் சேர்ந்தே உள்ளது. வருட இறுதியில் அனைத்து நிலுவைத் தொகைகளையும் மதிப்பாய்வு செய்து சந்தேகத்துக்குரிய வரவுகள் தொடர்பாக ஒரு கணிப்பீடு செய்யப்படும். மோசமான கடன்கள் அவை கண்டறியப்பட்ட ஆண்டிலேயே எழுதப்படும்.

### 1.6 பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை

பணப் புழக்க அறிக்கைக்கேற்ப, பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை என்பது கையிலுள்ள பணத்தையும், ங்கிகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும் வைப்புக்கள், வங்கி மேலதிக பற்றுக்களின் நிகர பெறுமதி என்பவற்றை உள்ளடக்கும். இருப்பு நிலைக்குறிப்பில் வங்கி மேலதிக பற்றுக்கள், கடன் பெறுகைகளின் மீது நடைமுறைப் பொறுப்புகளாக உள்ளக்கப்படும்.

### 1.7 இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

வணிக அறிக்கையில், இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் பின்னரான அனைத்து எழுத்து மூல நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுவதோடு அவசியப்படும் இடங்களில் சரி செய்தல்கள், வெளிப்படுத்தல்கள் போன்றவையும் மேற்கொள்ளப்படும்.

### 1.8 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

இருப்பு நிலைக் குறிப்புத் திகதியின் அனைத்துத் தெரிந'த பொறுப்புக்களும் வணிக அறிக்கையில் உள்ளடக்கப்படும். அறிக்கையில் காணப்படும் ஆனால் சரியாக காரணத்தை தீர்மானிக்க முடியாத பொறுப்புக்கள் தொடர்பில் போதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

1.9 ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஏற்பாடுகள

மேற்குறிப்பிடப்பட்ட இரு வகை நிதிப்பங்களிப்புகளுக்கும், ஊழியர்கள் தகுதி பெறுவர். நிறுவனங்கள் விஷேட கொடுப்பனவு தவிர்ந்த மொத்த சம்பளத்தில் முறையே 12% மற்றும் 3% ஐ ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்காக பங்களிப்பு செய்யும்.

1.10 வருமானம்

1.10.1 மீண்டெழும் செலவுக்கான பெறுகைகள்

பொதுக் கருவூலம் மூலம் நிறுவனத்துக்கு கிடைக்கப்பெறும் மீண்டு வரும் சலவுக்கான மானியங்கள் அனைத்தும் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

1.10.2 மூலதனச் செலவுக்கான பெறுகைகள்

பொதுக் கருவூலம் மூலம் நிறுவனத்தின் மூலதனச் செலவுக்காக கிடைக்கப் பெறும் மானியங்கள் குறிப்பிட்ட செலவுத் தொகையில் இருந்து கழிக்கப்படும்.

1.10.3 பயிற்சி வருமானம்

பயிற்றுவிப்புத் திட்டங்கள் மூலம் உருவாக்கப்படும் அனைத்து வருமானங்களும் பயிற்றுவிப்புத் திட்ட வருமானங்களாக அங்கீகரிக்கப்படும். அத்தோடு நிறுவனம் மூலம் ருவாக்கப்படும் அனைத்து வருமானங்களும் வருமான அறிக்கையில் 'வேறு வருமானங்கள்' பகுதியில் அங்கீகரிக்கப்படும்.

1.11 செலவுகள்

அலுவலக நடைமுறையில் ஏற்படும் அனைத்து மீண்டு வரும் செலவுகளும் வருமானத்தில் ஏற்படும் வசூலிப்புக்களாகும். ஆண்டின் செலவை விட வருமானத்தை உயர்த்தும் செயற்பாட்டில் இது செலவுப் பக்கத்தில் கொள்ளப்படும்.

1.12 இருப்புப் பொருட்கள்

பாடப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்ற இருப்புப் பொருட்கள் செலவில் அங்கீகரிக்கப்படும்.

## கணக்கீட்டுக் கோட்பாட்டின் மாற்றம்

2.1 தேய்மானக் கொள்கை

தேய்மான முறையானது கொள்வனவு வருடத்தின் முழுப் பெறுமானத் தேய்வு முறையில் இருந்து மாற்றப்படுவதோடு அப்புறப்படுத்தும் வருடத்தில் தேய்மானமானது, தேதி அடிப்படையிலான தேய்மானமாகவும் 2014ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் கொள்ளப்படுகின்றன.

## காசுப் பாய்ச˙சல் கூற்று

பணப் புழக்க அறிக்கையானது மறைமுக முறையைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்து. பணம் மற்றும் இருப்புத் தொகையானது, நிறுவனத்தின் வங்கி மற்றும் பண நிலுவையை உள்ளடக்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்று - 2023.12.31 ஆம் திகதிப் படி

| விபரம் | குறிப்புக்கள் | 2023.12.31<br>ரூபா | 2022.12.31<br>ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| உடமைகள், தாவரங்கள், உபகரணங்கள் | 06 | 50,001,308 | 32,820,028 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| வர்த்தகம் மற்றும் வேறு பெறுகைகள் | 07 | 20,990,734 | 21,340,672 |
| இருப்பு-கற்றல் உபகரணம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | | 1,334,029 | 2,329,143 |
| பணம் மற்றும் பண இருப்பு | 08 | 242,889,561 | 129,762,038 |
| மொத்த சொத்துக்கள் | | **315,215,632** | **186,251,880** |
| மூலதனம் | | **13,015,468** | **13,015,468** |
| திரட்டப்பட்ட உபரி (பற்றாக்குறை) | | 180,244,695 | 87,746,529 |
| மதிப்பீட்டு இருப்பு | | 74,215,823 | 47,000,892 |
| | | **267,475,986** | **147,762,889** |
| பொறுப ்புக்கள் | | | |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 09 | | |
| உபகாரக் கொடுப்பனவு | | 7,227,180 | 6,343,228 |
| நிலையான சொத்துக்களுக்கான அரச மானியம் | | 636,332 | 636,332 |
| | | **7,863,512** | **6,979,560** |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவு | 10 | 38,418,648 | 30,013,975 |
| திரட்டப்பட்ட செலவுகள் | 11 | 1,457,486 | 1,495,457 |
| | | **39,876,133** | **31,509,432** |
| மொத்த நிதிகளும் பொறுப்புக்களும் | | 315,215,632 | 186,251,881 |

## நிதிக்கூற்று சான்றுபடுத்துதல் மற்றும் அங்கீகரித்தல்

கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதி நிலை அறிக்கையின் முக்கியமான பாகங்களாகும். இந்நிதி நிலை அறிக்கையானது 2022.12.31 வரையான மாநில விவகாரங்கள் தொடர்பான உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தை வழங்கும் என்பதை உறுதி செய்கிறோம்.

இந்நிதி நிலை அறிக்கையானது அரசின் சட்டம் மற்றும் விதி முறைகளுக்கு இணக்கமானவையாகும்.

**ஒப்பம் அனோமா ரூபசிங்க**
கணக்காளர்

**ஷமிந்த மஹலேக்கம்**
பணிப்பாளர் நாயகம்

1-3 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 8-13 வரையான பக்கங்களில் உள்ள குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கியமான பங்கை வகிக்கின்றன.

நிதி அறிக்கையானது மேலாண்மை குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஓப்பம் பணிப்பாளர்
13.08.2024

தலைவர்
13.08.2024

## விரிவான வருமான அறிக்கை 2023.12.31ம் திகதிப் படி

| விபரம் | குறிப்பு | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| கருவூல பெறுகைகள் | 01 | 50,203,000 | 65,509,000 |
| பயிற்சித் திட்ட வருமானம் | | 173,838,925 | 103,597,400 |
| வேறு வருமானம் | 02 | 22,184,662 | 9,102,478 |
| **மொத்த வருமானம்** | | **246,226,587** | **178,208,878** |
| செலவுகள் | | | |
| நிர்வாக செலவுகள் | 03 | (82,310,559) | (82,361,401) |
| பயிற்சித் திட்ட செலவுகள் | 04 | (70,017,663) | (48,231,241) |
| செயல்பாடுகளின் போதான இலாபம் / (இழப்பு) | | 93,898,365 | 47,616,236 |
| நிதிச் செலவுகள் | 05 | (1,400,199) | (25,850) |
| வரி விதிப்புக்கு முன்னரான இலாபம் / (இழப்பு) | | 92,498,166 | 47,590,386 |
| வரி | | - | - |
| **வருடத்தின் இலாபம் / (இழப்பு)** | | **92,498,166** | **47,590,386** |

## நிகர சொத்து, விகிதப் பங்கு மாற்றம் தொடர்பான அறிக்கை

2023.12.31ம் திகதிப்படி

| விபரம் | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா | திரட்டப்பட்ட இலாபம்/(நட்டம்) ரூபா | மதிப்பீட்டு இருப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2023.01.01 க்கான நிலுவை | 13,015,468 | 87,746,529 | 47,000,892 | 147,762,889 |
| முன்னைய ஆண்டு சீர்செய்கை (குறிப்பு 12) | - | - | - | - |
| 2023 ம் ஆண்டுக்கான உபரி/(பற்றாக்குறை) | - | - | - | - |
| 2023.12.31க்கான நிலுவை | 13,015,468 | 87,746,529 | 47,000,892 | 147,762,890 |
| முன்னைய ஆண்டு சீர்செய்கை (குறிப்பு 12) | - | - | - | - |
| 2023 ம் ஆண்டுக்கான உபரி/(பற்றாக்குறை) | - | 92,498,166 | 27,214,931 | 119,713,098 |
| 2023.12.31 க்கான நிலுவை | 13,015,468 | 180,244,695 | 74,215,823 | 267,475,987 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

| விபரம் | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| வரிவிதிப்புக்கு முன்பான உபரி / (பற்றாக்குறை) | 92,498,166 | 47,590,386 |
| **பணமற்ற இயக்கத்தின் சீர்செய்கை** | | |
| தேய்மானம் | 10,127,840 | 7,797,309 |
| முன்வருட சீர்செய்கை | - | (347,225) |
| கருணைத் தொகை ஒதிக்கீடு | 883,953 | 940,230 |
| | **103,509,959** | **55,980,700** |
| வட்டியற்ற வருமானம் | (21,760,747) | (8,642,138) |
| செலுத்தப்பட்ட கருணைத் தொகை | - | (126,675) |
| வேலை மூலதனம் மாற முன்னரான இயக்க உபரிகள் / (பற்றாக்குறை) | 81,749,212 | 47,211,887 |
| **வேலை மூலதன மாற்றங்கள்** | | |
| வணிக மற்றும் ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு / (குறைவு) | 349,938 | (11,391,140) |
| வணிக மற்றும் ஏனைய செலுத்துதல்களின் அதிகரிப்பு / (குறைவு) | 8,366,701 | 10,522,341 |
| இருப்புக்களின் அதிகரிப்பு / (குறைவு) | 995,114 | (753,361) |
| | **91,460,965** | **45,589,727** |
| செயல்பாடுகளின் போதான நிகரப் பணப் புழக்கம் | 91,460,965 | 47,211,887 |
| **முதலீடுகளின் போதான பணப் புழக்கம்** | | |
| ஈட்டப்பட்ட சொத்துக்கள்,தாவரங்கள், உபகரணங்கள் | (94,189) | (261,405) |
| சொத்துக்கள்,தாவரங்கள், உபகரணம் விருத்தி செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் | - | 710,171 |
| வட்டி வருமானம் | 21,760,747 | 8,642,138 |
| முதலீடுகளின் போதான நிகர பணப் புழக்கம் | 21,666,558 | 9,090,904 |
| **வணிக செயல்பாடுகளின் போதான பணப் புழக்கம்** | | |
| நிலையான சொத்துக் கொள்வனவுக்காக கருவூலம் மூலம் வழங்கப்படும் மூலதனக் கொடுப்பனவு | 0 | (154,940) |
| வணிக செயல்பாடுகளின்' நிகர பணப் புழக்கம் | 0 | (154,940) |
| பணம் மற்றும' இருப்பு தொடர்பான நிகர மாற்றம் | 113,127,523 | 54,525,691 |
| பணம் மற்றும' இருப்புக்கள் - வருட ஆரம்பத்தில் | 129,762,038 | 75,236,348 |
| பணம் மற்றும' இருப்புக்கள் - வருட இறுதியில் (குறிப்பு அ) | 242,889,561 | 129,762,038 |
| குறிப்பு அ - பணம் மற்றும் இருப்புக்கள் | | |
| **வங்கியிலுள்ள பணம்** | **242,889,561** | **129,762,038** |

## நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

2023.12.31 திகதி நிறைவடைந்த ஆண்டுக்கானது.

| விபரம் | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| குறிப்பு 1 வருமானம் | | |
| மீண்டு வரும் செலவுக்கான மானியம் | 50,203,000 | 54,733,000 |
| மூலதன செலவுக்கான மானியம் | | |
| கருவூலத்தில் இருந்தான மொத்த மூலதன மானியம் | - | - |
| நிலையான சொத்துக்களுக்கான குறைந்த மானியம் | - | 10,776,000 |
| | **50,203,000** | **65,509,000** |
| பயிற்சித்திட்ட வருமானம் | 173,838,925 | 65,509,000 |
| குறிப்பு 2 ஏனைய வருமானம் | | |
| ஏல கட்டணம் | 15,000 | 42,000 |
| வட்டி வருமானம் | 21,760,747 | 8,642,138 |
| சம்பளமற்ற கட்டணம் மற்றும் சம்பளக் கழிவு | - | 48,012 |
| நிலையான சொத்துக்களுக்கான அரச மானியம் | - | 154,940 |
| மண்டப, தங்குமிட கட்டணம் | 25,000 | 39,000 |
| பதிவுக் கட்டணம் | - | 8,000 |
| ஏனைய வருமானம் | 383,915 | 168,388 |
| மொத்தம் | **22,184,662** | **9,102,478** |
| குறிப்பு 3 நிர்வாக செலவுகள் | | |
| **தனிப்பட்ட ஊதியங்கள்** | | |
| சம்பளம் மற்றும் கூலிகள் | 21,600,515 | 25,015,029 |
| EPF கொடுப்பனவுகள் (12%) | 2,544,781 | 2,982,660 |
| ETF கொடுப்பனவுகள் (3%) | 636,195 | 745,665 |
| தலைவர் கொடுப்பனவு | 864,975 | 845,089 |
| மேலதிக நேர வேலை | 167,239 | 190,547 |
| விடுமுறை நாள் கட்டணம் | 34,080 | 14,875 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 2,831,790 | 3,149,578 |
| வாகன கொடுப்பனவுகள் | 1,350,000 | 1,800,000 |
| எரிபொருள் கொடுப்பனவுகள் | 1,395,752 | 1,549,339 |
| பயிற்சி எடுப 'போர் கொடுப்பனவுகள் | 1,234,612 | 598,950 |
| ஊழியர் பயிற்சி, திறன் விருத்தி | 605,216 | 883,125 |

| | | |
|---|---|---|
| இருப்பு, பயண கொடுப்பனவு | 326,910 | 247,740 |
| வெகுமதி, ஊக்கத்தொகை | 1,050,000 | 675,000 |
| கருணை தொகை செலவு | 883,953 | 940,230 |
| உள்நாட்டுப் பயணம் | 667,415 | 520,016 |
| வெளிநாட்டுப் பயணம் | 668,468 | - |
| நிலையான மற்றும் அலுவலக தேவைகள் | 824,559 | 500,771 |
| எரிபொருள் | 2,296,023 | 834,781 |
| சீருடைகள் | 278,416 | 36,000 |
| சிற்றுண்டி | 230,334 | 191,727 |
| பத்திரிகைகள், ஏனையவை | 331,781 | 95,821 |
| **பராமரிப்புச் செலவுகள்** | | |
| ............. | 1,050,000 | 675,000 |
| வாகனங்கள் | 5,133,258 | 2,389,669 |
| திட்டங்களும் இயந்திரங்களும் | 1,214,342 | 341,959 |
| கணனிகள | 263,628 | 313,435 |
| கட்டிடங்கள் | 340,435 | 873,301 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 37,870 | 189,055 |
| **சேவைகள்** | | |
| தபால் மற்றும் தொடர்பாடல் | 732,862 | 716,143 |
| மின˙சாரம் | 2,425,265 | 1,391,221 |
| நீர் | 237,387 | 240,173 |
| வாடகை | 10,411,417 | 16,866,625 |
| பயணம் மற்றும் போக்குவரத்து | - | 23,637 |
| பாதுகாப்புச் சேவை | 3,990,243 | 3,853,818 |
| காவளாளி சேவை | 5,495,550 | 3,928,006 |
| விளம்பரம் | 191,843 | - |
| சுகாதார செலவு | - | - |
| குத்தகை செயற்பாடு | - | 407,430 |
| கணக்காய்வுக் கட்டணம் | 504,660 | 326,400 |
| மொழிபெயர்ப்புப˙ கட்டணம் | 15,263 | - |
| சட்டம் சார்ந்த கட்டணம் | 7,000 | 439,250 |
| தடை தாண்டல் பரீட˙சை கட்டணம் | 17,100 | - |

| | | |
|---|---|---|
| ஏனையவை | 341,582 | 447,025 |
| தேய்மானம் | | |
| கட்டடம் மற்றும' கட்டமைப்பு | 648,569 | 648,569 |
| தாவரம்,இயந'திரம் மற்றும் உபகரணம் | 43,622 | 56,795 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 1,979,476 | 1,959,620 |
| வாகனங்கள் | 7,275,000 | 4,950,000 |
| நூலக நூல்கள் | - | - |
| கணனிகள் | 64,924 | 66,076 |
| இணையத்தளம் | 116,250 | 116,250 |
| மொத்தம் | 82,310,559 | 82,361,400 |
| குறிப்பு 4 பயிற்சித் திட்ட செலவுகள் | | |
| வளவாளர் செலவு | 40,642,054 | 32,307,195 |
| நிலையான உபகரணங்கள், செயற்றிட்டத்துக்கு வேண்டியவை | 2,887,508 | 966,155 |
| தபால், தொடர்பாடல் | 2,380,960 | 709,166 |
| உணவு, சிற்றுண்டி | 6,803,893 | 3,401,860 |
| தங்குமிடம் | 1,371,562 | 563,279 |
| வாகனக் கூலி | 182,400 | 1,286,055 |
| ஆசிரியர் வழிகாட்டி, பாடப் புத்தகம் | - | 133,000 |
| வழக்குப் பதிவுப் பட்டியல் மற்றும் சான்றிதழ் அச்சிடும் செலவு | 1,069,845 | 148,325 |
| தொழினுட்ப செலவு (ணுழழஅ செயலி) | - | 765,534 |
| ஊழிய சேவை ஆதரவு | - | - |
| மேலதிக நேர வேலை | 2,898,606 | 1,407,857 |
| விடுமுறை நாள் கட்டணம் | 329,006 | 238,572 |
| எரிபொருள் | 6,145,166 | 4,120,192 |
| மின'சாரம் | 1,069,310 | 444,314 |
| நீர் | 179,339 | 82,517 |
| உள்நாட்டுப் பயணம் | 1,557,721 | 964,630 |
| பயிலுனர், ஊழியர் கொடுப்பனவு | - | - |
| பயண, பங்குபற'றல் கொடுப்பனவு | - | 138,600 |
| விளம்பரம் | - | 27,216 |
| தங்குமிடம், அலுவலக தேவை | 92,325 | 20,000 |
| மொழிபெயர்ப்பு, பரீட்சை, ஆலோசனை கட்டணம் | 18,873 | - |

| | | |
|---|---|---|
| சுகாதார செலவுகள் | - | 51,800 |
| மோசமான கடனாளிகள் | 2,290,285 | 338,800 |
| ஏனைய சேவைகள் | 98,812 | 116,176 |
| **மொத்தம்** | 70,017,663 | 48,231,243 |
| **குறிப்பு 5 வணிக செலவுகள்** | | |
| வங்கி கட்டணங்கள் | 22,100 | 25,850 |
| வரி வருமானம் மீதான வரி விதிப்பு | 1,378,099 | - |
| **மொத்தம்** | **1,400,199** | **25,850** |

### குறிப்பு 6 சொத்து, தாவரம், உபகரணம்

| விபரம் | பெறுமானத் தேய்வு வீதம | மொ.செலவு 2023.01.01 ரூபா | கூடுதல் / மதிப்பீடு ரூபா | மொத்த செலவு 2023.12.31 ரூபா | துல்லியமான கடன் 2023.01.01 ரூபா | மறுமதிப்பீடு ரூபா | வருமான வருடத்தின் தேய்மானம் ரூபா | துல்லியமான கடன் 2023.12.31 ரூபா | மதிப்பும் குறைப்பு மதிப்பு 2023.12.31 ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | - | 615,000 | - | 615,000 | - | - | - | - | 615,000 |
| கட்டடம், கட்டமைப்பு | 2.5% | 25,942,745 | - | 25,942,745 | 3,628,597 | - | 648,569 | 4,277,166 | 21,665,580 |
| தாவரம்,இயந் திரம், உபகரணம் | 20% | 13,491,456 | - | 13,491,456 | 13,430,205 | - | 43,622 | 13,473,826 | 17,630 |
| தளபாடம் அலுவலக உபகரணம் | 10% | 19,763,280 | 94,190 | 19,763,280 | 13,691,186 | - | 1,979,476 | 15,670,662 | 4,186,809 |
| வாகனம் | 25% | 19,800,000 | 9,300,000 | 29,100,000 | 16,436,712 | 17,914,931 | 7,275,000 | 5,796,781 | 23,303,219 |
| நூலக நூல்கள் | 10% | 1,343,352 | - | 1,343,352 | 1,343,352 | - | - | 1,343,352 | - |
| கணனி | 25% | 8,316,944 | - | 8,316,944 | 8,252,020 | - | 64,924 | 8,316,944 | - |
| NILET இணையத்தளம் | | 465,000 | - | 465,000 | 135,678 | - | 116,250 | 251,928 | 213,072 |
| மொத்தம் | 25% | **89,737,777** | **9,394,189** | **99,131,967** | **56,917,748** | **17,914,931** | **10,127,840** | **49,130,658** | **50,001,308** |

| குறிப்பு 7 வணிக மற்றும் ஏனைய பெறுகைகள் | | |
|---|---|---|
| பெறத்தக்க வருமானம் - திரு. ஹேவாசிங்க | 58,983 | 58,983 |
| பெறுகை - திரு. துறம் | - | - |
| பெறத்தக்க வருமானம் - திரு. நாபாவல | - | 9,650 |
| பெறத்தக்க வருமானம் - திரு. விக்ரமசிங்ஹ | - | 9,650 |
| பெறத்தக்க வருமானம் - குனு வட்டி | - | 5,801,228 |
| பெருநாள் முன்பணம் | 449,000 | 92,000 |
| பெறத்தக்க கற்கைநெறி கட்டணம் - அரச சேவை அமைச்சு | - | - |
| வைப்புக்கள் - பெறத்தக்கவை | 351,500 | 201,500 |
| கட்டடங்களுக்கான முன்பணம் | 6,250,000 | 6,250,000 |
| பெறத்தக்க வருமானம் - புத்த விவகார அமைச்சு | - | 165,000 |
| பெறத்தக்க வருமானம் - சுகாதார அமைச்சு | - | - |
| பெறத்தக்க செயற்திட்ட வருமானம் | 451,000 | 2,722,125 |
| பெறத்தக்க வருமானம் - உரிமையுள்ள நிறுவனம் | 13,430,250 | 3,740,250 |
| பெறத்தக்க வருமானம் - மத்திய அமைச ்சு (நீக்கப்பட்டது) | - | 2,290,285 |
| **மொத்தம்** | **20,990,733** | **21,340,672** |
| குறிப்பு 8 பண மற்றும் பணத்துக்கு நிகரானவை | | |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல 0007442918 | | |
| மூலதன காசேடு | 17,223 | 17,223 |
| மீண்டுவரும் காசேடு | 4,954,859 | 5,139,087 |
| அமைச்சுக் காசேடு | - | - |
| வருமானக் காசேடு | 49,275,975 | 11,668,100 |
| மொழி பயிற்றுவிப்பாளர், பயிற்றுவிப்பு காசேடு | - | - |
| சேமிப்புக் கணக்கு - இலங்கை வங்கி 79712746 | 424,180 | 577,750 |
| நிலையான வைப்புக்கள் | 188,197,324 | 112,359,878 |
| முற்பணங்கள் | 20,000 | - |
| **மொத்தம்** | **242,889,561** | **129,762,038** |
| குறிப ்பு 9 நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | |
| நிலையான சொத்துக்களுக்கான கருவூலம் மூலமான மூலதன மானியம் | 636,332 | 636,332 |
| உபகாரத் தொகைக் கொடுப்பனவு | 7,227,180 | 6,343,228 |
| **மொத்தம்** | **7,863,512** | **6,979,560** |

| குறிப்பு 10 - வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | | |
|---|---|---|
| மீள் செலுத்தக் கூடிய வைப்பு | 565,000 | 445,000 |
| வளவாளர் கொடுப்பனவு | 22,744,458 | 16,526,885 |
| அச்சிடல் மற்றும் கற்றல் உபகரணம் | 5,050 | 722,830 |
| சுகாதார சேவைகள் | 543,825 | 347,000 |
| பாதுகாப்புச் சேவை | 318,377 | 647,589 |
| விக்ரமராச்சி கன்ஸ்ரக்ஷன் - அகலவத்தை புதிப்பித்தல் பண | - | - |
| முன்னர் கிடைக்கப் பெற்ற பாடநெறிக் கட்டணம் | 1,345,000 | 1,345,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 432,000 | 723,600 |
| பாடப்புத்தகங்களும் ஆசிரியர் கையேடு தயாரிப்பும் | 423,000 | 423,000 |
| செலுத்தக்கூடிய கூலி | 8,281,660 | 5,450,600 |
| மீள் செலுத்தத்தக்க பாட நெறிக் கட்டணம் | 58,500 | 13,500 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 610,984 | 409,476 |
| ஒலி / ஒளி பரப்பு நிகழ்ச்சி | 2,959,496 | 2,959,496 |
| சம்பளக் கொடுப்பனவுகள் | - | - |
| இடை நிறுத்தப்பட்ட வரி | 27,568 | - |
| ஏனைய செலவுகள் | 103,730 | - |
| மொத்தம் | 38,418,648 | 30,013,975 |
| குறிப்பு 11 - திறன் செலவுகள் | | |
| உள்நாட்டுப் பயணம் | 7,990 | 35,650 |
| தபால் மற்றும் தொடர்பாடல் | 97,805 | 71,791 |
| மினசாரக் கட்டணங்கள் | 303,419 | 146,456 |
| நீர் | 57,178 | 18,164 |
| எரிபொருள் | 290,602 | 195,680 |
| உணவு, சிற்றுண்டி | 20,460 | 22,800 |
| பாதுகாப்புச் சேவை | - | - |
| மேலதிக நேர வேலை | 469,868 | 455,342 |
| விடுமுறை நாள் கொடுப்பனவு | 8,687 | 8,184 |
| தொழிலாளர் கூலி மற்றும் பயிற்சியாளர் கொடுப்பனவு | - | - |
| மொழிபெயர்ப்பு கட்டணம் | - | - |
| அமர்வுக் கொடுப்பனவு | - | 8,500 |

| | | |
|---|---|---|
| சுகாதார சேவைகள் | - | - |
| வாகனக் கூலி | 24,450 | 454,540 |
| பாடப்புத்தகங்களும் ஆசிரியர் கையேடு தயாரிப்பும் | 34,000 | 25,000 |
| தங்குமிடம் | 5,050 | 722,830 |
| கணனி பராமரிப்பு | 131,700 | 45,000 |
| முத்திரை வரி | 8,325 | 8,350 |
| APIT | 3,003 | - |
| மொத்தம் | **1,457,486** | **1,495,457** |
| **குறிப்பு 12 - முன்னைய வருடம் 2022 (சீர் செய்தல் 2023)** | | **2022** |
| உள்துறை வேலைகளுக்கான ஏற்பாடு | - | (279,199) |
| பொது நிர்வாக அமைச்சில் இருந்தான பெறுகைகள் | - | - |
| அகலவத்த மேல் புதுப்பித்தல் - நிறுத்தி வைப்பு | - | - |
| சுகாதார மருத்துவ அதிகாரி - பெறுகைகள | - | 2,975,000 |
| நிலையான சொத்துக்கான அரச மானியம் 2020 | - | 86,762 |
| மொத்தம் | - | **2,782,563** |

குறிப்பு 13 - நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

எமது நிறுவனத்தால் பணி நீக்கம் செய்யப்பட்ட திரு. P.M.M பிரதௌஸ் என்பவர் மீள் நியமனத்தை வேண்டி ஹோமாகம தொழில் நீதிமன்றத்தில் எமது நிறுவனத்திற்கெதிராக வழக்கு எண் 33/1415/2019 இல் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

எமது நிறுவனத்தால் பணி நீக்கம் செய்யப்பட்ட திரு. C.C சில்வா என்பவர் மீள் நியமனத்தை வேண்டி ஹோமாகம தொழில் நீதிமன்றத்தில் எமது நிறுவனத்திற்கெதிராக வழக்கு எண் 33/1560/2021 இல் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

எமது நிறுவனத்தில் கல்வி மற்றும் ஆய்வு அலுவலகராக பணி புரியும் திருமதி. P பஸ்மிலா ரவிராஜ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு எண் SC/FR/424/2019 இல் தனக்கு பணிப்பாளர் பதவி கிடைக்காமை தொடர்பாக நிறுவனத்திற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

எமது நிறுவனத்தின் ஆணையாளர் நாயகமாக பணிபுரியும் திரு பிரஸாத் சு. ஹேரத் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண் CA/WRIT/218/2019 இன் தான் சேவையில் இருந்து தடைக் கட்டளை இடப்பட்டதை எதிர்த்து எமது நிறுவனத்துக்கு எதிராக மீள் நியமனம் கோரி வழக்குத்தாக்கல் செய்துள்ளார். அவரது மீள் நியமனத்தின் பின் வழக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

உரிமையுள்ள நிறுவனமாக பதிவுசெய்யப்பட்டு, மொழி பயிற்சியாளர்களுக்கு 2019 இல் மாழி பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்திய நஷா தமிழ் கல்விக் கூடமானது, தமக்கு கிடைக்க வேண்டிய பணத் தொகையான ரூபா. 446,485 ஐ செலுத்தாமை காரணமாக எமது நிறுவனத்திற்கெதிராக மனித உரிமை

ஆணைக்குழுவில் இலக்கம் HRC/AP/T2/2021 இன் கீழ் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

குறிப்பு 14 – 2019 பாதீட்டு முன்மொழிவின் படி மொழி பயிற்சியாளர்களை பயிற்சிவித்தல்

2019ம் ஆண்டு முன ்மொழிவுப் படியும் mgk/19/2693/131/018-I எனும் அமைச்சரவை ஒப்புதலின் படியும் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட்ட 'மொழி பயிற்சியாளரின ் பயிற்சித் திட்டம்' தொடர்பாக ரூ. 37,395,922.00 பெறுமதியான விலைப்பட்டியலுக்கான கட்டணம் மற்றும் தேவையான நிதிகள் அரச கருவூலம் மூலம் கிடைக்கப்பெறவுள்ளன. இத்திட்டம் 2019 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 15 – சம்பந்தப்பட்ட தரப்புகளை விசாரித்தல்

இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களோடு தொடர்புபட்ட தரப்புக்களோடு நிறுவனமானது கொடுக்கல் வாங்கல்களைப் பேணி வருகின ்றது. சம்பந ்தப்பட்ட தரப்புக்கள் தொடர்பான தரவுகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் செயல்பாடுபளை முகாமை செய்யவும் பரிபாலனம் செய்யவும் நிறுவனத்தின் மேலாண்மை குழுவுக்கே அதிகாரமும் பொறுப்பும் உள்ளது. ஆணையாளர் நாயகமே நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மற்றும் மேலாண்மைக் குழுவின் செயலாளர் ஆவார். அதன்படி, நிறுவனத்தின் மேலாண்மை குழு மற்றும் ஆணையாளர் நாயகம் ஆகியோர் தலைமை நிர்வாக பணியாளர்களாக உள்ளனர். இவர்களுக்காக வழங்கப்படும் ந்ஷ்டஈடு கீழ்வருமாறு,

| பெயர் | | ந்ஷ்டஈடு (ருபா) | |
|---|---|---|---|
| | | இருக்கை கொடுப்பனவு | மாத சம்பளம்/ கொடுப்பனவு |
| 26.01.2023 முதல் 31.07.2023 வரை | | | |
| திரு. J.B ஹேமன்ர | தலைவர் ராஜினாமா 05.05.2023 | | 1,787,385 |
| திரு. அனுராத விஜயகோன் | சபை உறுப்பினர் | 40,970 | - |
| திருமதி. நிமாலி அனுஷா ஜயகொடி | சபை உறுப்பினர் | 32,980 | - |
| திருமதி. C.M.P.J. திலகரத்ன | சபை உறுப்பினர் | 15,980 | - |
| திருமதி K D I S K. சிறிவர்தன | சபை உறுப்பினர் | 32,980 | - |
| Dr W K கொலம்பகே | சபை உறுப்பினர் | 32,980 | - |
| திரு தினுக் ஹெட்டியாரச்சி | சபை உறுப்பினர் | 24,480 | - |
| திருமதி சதுரிகா ரணவீர | சபை உறுப்பினர் | - | - |
| திரு விதுர்சன் வின்சென்ரராஜன் | சபை உறுப்பினர் | - | - |
| திரு N G S H நவ்'த | சபை உறுப்பினர் | - | - |
| Dr P H P R ஹேரத் | ஆணையாளர் நாயகம் | - | 1,208,422 |
| 2023.11.24 முதல் 2023.12.31 வரை | | | |
| திரு வினோத் குமார் முனசிங்க | தலைவர் நியமனம் 10.11.2023 | | 230,190 |
| திரு. M L கம்மன்பில | சபை உறுப்பினர் | 7,990 | - |
| திரு. D A P அபேசேகர | சபை உறுப்பினர் | 7,990 | - |
| திருமதி R P S ஸமன்குமாரி | சபை உறுப்பினர் | 7,990 | - |
| திருமதி ஹஸனாஹ் ஷேஹு | சபை உறுப்பினர் | 15,980 | - |
| திரு ஜயந்த ஜயமன்னே | சபை உறுப்பினர் | 15,980 | - |
| திரு ஸட்சின் ' தனன்தன் | சபை உறுப்பினர் | 7,990 | - |
| திரு சீலரத்ன செனரத | சபை உறுப்பினர் | - | - |
| திரு சமின்த மஹலேகம் | ஆணையாளர் நாயகம் நியமனம் 2023.11.06 | | 147,694.00 |

சம்பந்தப்பட்ட தரப்புக்களோடான கொடுக்கல் வாங்கல்

தலைமை நிர்வாக பணியபளர்களோடான, மேலே குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக வேறெந்த கொடுக்கல் வாங்கலும் 2022ம் ஆண்டில் இடம்பெறவில்லை

# முகங்கொடுக்கும் சவால்கள்

01 எமது நிறுவனத்துக்கு உரியதாக இருந்த அரச அலுவலர்களின் இரண்டாம் மொழி பயிற்சி கருமம் 18/2020 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் அதற்கு முன்னர் நிலவிய நிறுவனத்தின் கருமங்கள் மாற்றம் செய்யப்பட்டு அரசகரும மொழிகள் திணைக்களத்திக்கு உரித்தளிக்கப்பட்டதன் காரணமாக இரண்டு நிறுவனங்களுக்கிடையில் ஊசலாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

02 அரசகரும மொழிகள் திணைக்களம் அரச அலுவலர்களின் இரண்டாம் மொழி பாடநெறி இலவசமாக நடத்தப்படுவதன் மூலம் எமது நிறுவனம் சுய நிதியீட்டல் நிறுவனமாக நிதி அறவிட்டு நடத்தப்படுவதன் காரணமாக பாடநெறியை பயில்பவர்கள் பணத்தை அறவிட்டு எமது நிறுவனத்துக்கு பயில்பவர்களை ஈர்த்தல் நிரமமாக உள்ளது.

03 நிறுவன அலுவலர்கள் தொடர்ச்சியாக விலகிச் செல்லுதல் காரணமாக நிறுவனத்தின் கருமங்களை வினைத்திறனாகவும், உற்பத்தித்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு போதுமான ஆளணி இன்மை மற்றும் அதன் காரணமாக தற்போதுள்ள ஊழியர்கள் மேலதிக பணிச்சுமை ஏற்படுதல்.

04 நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் பதவி வெற்றிடம் நிலவும் போதும் பயிற்சிப் பிரிவை இயக்குவதற்காக பெருமளவு மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடத்த வேண்டியுள்ளது.

05 சுய நிதியீட்டல் நிறுவனம் என்ற ரீதியில் செயற்பட்ட போதிலும், நிறுவன அலுவலர்களின் தொழில் திருப்தியை அதிகரிப்பதற்காக எந்தவொரு செயற்திட்டமும் (காப்புறுதி/கடன் வசதி) அமுல்படுத்தப்படாமை காரணமாக அலுவலர்கள் மிகவும் திருப்தியின்றி பணியாற்றுதல்.

06 அலுவலர் பற்றாக்குறை காரணமாக பயிற்சிப் பிரிவு பணிப்பாளர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அலவலர்கள் தமது கடமைகளுக்கு புறம்பான கருமங்களையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் நிறுவனம் அமைக்கப்பட்ட குறிக்கோளான ஆராய்ச்சி கருமங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பு அல்லது வசதி கிடைக்காமை.

07 நிறுவனத்துக்கு சொந்தமாக போதுமானளவு வாகனங்கள் இன்மை காரணமாக உரிய காலத்தினுள் பயிற்சி பாடநெறி மேற்பார்வைக்காக செல்வதில் சிக்கல் ஏற்படுதல்.

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாகம்இ உள்நாட்டலுவல்கள்இ மாகாண சபைகள் மற்றும் உள்ராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government


ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
National Institute of Language Education and Training

321/1, හයිලෙවල් පාර, මාකුඹුර, පන්නිපිටිය.
321/1, ஹைலெவல் வீதி, மாகும்புர, பன்னிபிட்டிய.
321/1, High Level Road, Makumbura, Pannipitiya.

011 30 92 910    011 20 86 422

www.niletgov.lk